ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2117/44 - 2019 අප්‍රේල් මස 03 වැනි බදාදා - 2019.04.03

*2117/44 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்***

*தென் மாகாண மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்*

*தென் மாகாண மாகாண சபையின் உறுப்பினரான ஆரச்சிகே கிருசாந்த புஸ்பகுமார வீரசிங்ஹ அவர்கள் கேட்டுவிலகியமை காரணமாக, அம் மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(1) ஆம் பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளாராதலாலும் ;*

*ஆரச்சிகே கிருசாந்த புஸ்பகுமார வீரசிங்ஹ எனும் பெயருடைய பதவி வகித்த உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் கீழ் தகைமையுள்ள ஆளொருவரைப் பெயர் குறிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென கார்தியெஸ் தேனெந்தி என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

1A - G 29823 — 37 (2019/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, கார்தியெஸ் தேனெந்தி என்பவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான காலி நிருவாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல்கள் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல்கள் ஆணைக்குழு.*

*எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல்கள் ஆணைக்குழு.*

*தேர்தல்கள் செயலகம்,*
*இராஜகிரிய,*
*2019, ஏப்பிறல் 03.*

*04-605*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.